1006

பதிவு எண்— M 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர்: இளவழகனார்.

கிளை-8 குருகுலம், மாம்பாக்கம்; மன்மத: சித்திரை அ 20—4—56 தளிர்-26

திருக்குறள் பிழிவு:

மொழி வகைப் பிரிவு:

ஒரு நாட்டின் உட்பிரிவுகள், உட்பிளவுகளாதல் கூடாது; அதாவது உட்பகைகளாதல் கூடாது. மக்களுக்கு நன்கு பயன்படவும் ஆட்சி எளிமை கொள்ளவும் உட் பிரிவுகள்தேவை; மிகவும் இன்றியமையாதன.

நாடு, இயற்கை எல்லைகளாலும் மக்கள் அணைவினாலும் உலகத்திற் கூறு கொள்கின்றன; நாட்டின் உட் பிரிவுகளுக்கும் இக் காரணம் பொருந்தும். மக்கள் அணைவுக்குக் காரணங்கள் பல.

சமுதாயம் என்னும் உலக மன்பதை, தட்ப வெப்ப நிலை போக்கு வரவுக்கான இயற்கைத் தடைகள் முதலியவற்றால் நிறம் மொழி பழக்கவழக்கங்களில் வேறுபாடுகள் அமைந்து பிரிவுபடுகின்றது; பழக்கவழக்கங்களிலிருந்தும் சாதி சமய அமைப்புகள் கிளைக்கின்றன.

மன்பதையைப் பிரிக்கும் இக்காரணங்களில் நிறம் மொழி என்பவை வலிமையுடையன; இவற்றிலும் மொழிதான் மிகு வலிமையுடையது: நிறம் புறத் தோற்றந்தான்; ஆனால், மொழியோ, அறிவுக் கருக்கள் அமைந்து, அகநிலை புறநிலை முன்னேற்றங்களுக்கு உதவியாய் இருப்பது; தவிர்க்க முடியாதது, தவிர்க்கவுங் கூடாதது; அதிலும் நெடும் பழமை வாய்ந்து, பலப் பல வரலாறுகளும் அரசும் கலைகளுங் கண்டு வலிமை வாய்ந்த இலக்கண வரம்புகளுடன் புதுமைக்கும் புதுமையாய் நாளும் உயிர் வாழ்ந்து வரும் தமிழ் மொழி போன்ற ஒரு சில மொழிகள், நாட்டின் உட் பிரிவுக்கு மிகவும் உதவியானவை; இந்தியாவில் எந்த மொழிப் பெயரால் உட் பிரிவுகள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் தமிழ் மொழிப் பெயரால் ஒரு மாநிலப் பிரிவு இருக்க வேண்டுவது முதன்மையானது; உலகுக்கே அது ஒளி வழங்கும்.

மொழிவழிப் பிரிவு இதனால் ஆழ்ந்த அறிவுத் திறப் பிரிவு என்பது புலப்படும்; இயற்கை உணர்வின்பம் பயந்து ஏனையோருடன் பகைக்கு இடமில்லாதது. பொருளாதாரம் முதலிய ஏனைக் காரணங்களால் ஏனையோருடன் ஒற்றுமை கொள்வதில் சிறிதும் தடை செய்யாதது.

திருவள்ளுவர் பல் குழுவும் உட்பகையும் என்று பிரித்தது, மொழிப் பிரிவல்லாத ஏனைச் சாதி சமயப் பிரிவுகளை என்பது பரிமேலழகர் உரையினால் விளங்குதலால், மொழி வழிப் பிரிவு இயற்கையாற்றல் வாய்ந்து நாட்டுஒற்றுமைக்கும் நாட்டின் இயல்பான வளர்ச்சிக்கும் நலம் பயப்பதே என்பதுஇனிது தெளியப்படும்.

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

8-ம் ஆண்டுக் கையொப்பம்
(28-10-55 முதல்)

உள்நாடு	ரூ.	4	0	0
வெளி நாடு	ரூ.	6	0	0
தனித் தாள்	ரூ.	0	1	0
ஆயுள்— கையொப்பம்	ரூ.	100	0	0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்;
மதுராந்தகம் P. O.
(தென்னிந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா"
—புறநானூறு.

கிளை 8	மன்மத, 20-4-56	தளிர் 26

பெரியோர்களே பேசுங்கள்!

பெரியோர்களே! சங்கத் தமிழ் பயின்ற சான்றோர்களே! தமிழகம் ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலேயே நாகரிகமுற்று, சீனமும் யவனமும் ஈழமும் எகிபதும் போற்றத் தரணி முழுவதற்கும் நாகரிகம் கற்பித்து, மேல் நாட்டினர் வகையுடன் வாழவும் தெரியாது மாக்களைப் போலத் திரிந்த காலத்திலேயே அகமும் புறமும் கண்டு அரசியல் அமைத்து அறம் பொருள் இன்பங் கடந்து ஆன்ம விடுதலைக் கான வழிகளையும் அருட் கண்ணால் கண்டது என்றெல்லாம் சொல்லி ஆர்வமூட்டினீர்களே! அழிந் தொழிந்துபோன ஆயிரமாயிரம் நூல்கள் போக எஞ்சியுள்ள எட்டையும் பத்தையும் பதினெட்டையும் ஏனைய சில நூல்களையும் காட்டி ஏற்றம் பல உண்டு எம் தமிழ் நாட்டுக்கு எனத் தீட்டினீர்களே! "தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!" "தமிழனென்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா!" என்றெல்லாம் பாடினீர்களே!

எங்கே உங்கள் தமிழகம்! எல்லைகள்தாம் காப்பாற்றப்படவில்லை; எஞ்சிய நிலத்திற்கேனும், இன்பூட்டும் 'தமிழ் நாடு' 'தமிழகம்' எனப் பெயர் வைக்க இந்நாட்டு ஏந்தல்கள் முன் வரவில்லையே, "பெயர் மாற்றத்தினால் பேறு என்ன கிடைக்கும்?" என்று கேட்டுத் தடையே போடுகின்றார்களே! ஏன் பேசாமல் இருக்கின்றீர்கள்?

உலகெங்கும் உள்ள— எழுத்தற்ற— பேச்சற்ற— இலக்கணவரம்பற்ற மொழியாளரெல்லாம் தத்தம் மொழியை வளம்படுத்த— பகட்டாக வாழ— அவை வழங்கும் பகுதிகளைத் திரட்டித் தம் மொழி ஆட்சி காணத் துடிதுடிக்கின்றனர்! ஐயவோ, உங்கள் இன்பத் தமிழகத்தில், எல்லையெல்லாம் பறிபோனபின் இயல்பாகக் கிடைத்துள்ள பகுதிக்கும் எதற்குப்பெயர் மாற்றம் என்று கேட்பவர்களாகவும், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவோராகவும் மக்கள் ஆர்வத்தைச் சொன்னால், ஆகட்டும் என்பார்களோ, வேண்டாம் என்பார்களோ என்று அச்சப்படுபவர்களாகவுந் தானே அவரவரும் இருக்கிறார்கள். ஆகுமோ இந்தப் போக்கு குடியாட்சியில்?

தாய்மொழியின் முதன்மையை—உரிமை உணர்ச்சி பெறத் தக்கபடி நாட்டுக்கு உணர்த்திய தக்கோர்களே — தலைவரை — அந்த உண்மைத் தலைவரை இழந்த காரணத்தால் ஏதேதோ உரைக்கிறார்கள், தடை போடுகிறார்கள், தடையாகவும் இருக்கிறார்கள்.

உரிமை என்பது என்ன? தாயாதிகள் மல்கி விட்ட ஒரு பெருங் குடும்பம் போன்ற இவ்விந்திய நாட்டில், ஒற்றுமை எப்படி வரும்? இவை இரண்டும் என்றென்றும் தக்கபடி காப்பாற்றப் படுவதற்கு எடுக்கவேண்டிய முயற்சிகள்— செய்ய வேண்டிய ஏற்பாடுகள் என்னென்ன— என்னும் அடிப்படை உண்மைகளையே அறியாமல் வீண் அச்சமும், வேண்டாத பல ஏற்பாட்டு எண்ணங்களும் கொண்டு அரசியல் தலை

பாடல்கள் ஐந்து வகைக் கட்டளையில் அடங்கும் எனக் கூறப்படுகிறது. அவற்றுள், திருக்கழுக்குன்றப் பதிகம் பண் குறிஞ்சியில் ஐந்தாம் கட்டளையில் ஏழாம் பதிகம் ஆகும். இவ்வழியே இசைப்படுத்தியுள்ளேன். அறிஞர்கள் பயின்று ஆக்கம் பெறுவார்களாக!

குறிஞ்சிப் பண்

திருஞானசம்பந்தர்

அருளிய

திருக்கழுக்குன்றப் பதிகம்

குறிஞ்சி யாழ் உழை முதலாகக் கட்டப்படும் இலக்கணங் குறித்து இக்காலக் குறியீட்டெழுத்தில் எழுதினல் இவ்வாறு நிற்கும்.

நி ச ரி க ம ப த

இம்முறை பழங்காலத்தில் குறிஞ்சியாழ்க் கருவியில் உழைமுதலாகக் கைக்கிளை இறுவாயாகக் கட்டப்பெற்று இளி முதலாக எடுத்து உழை நரம்பினை இளி நரம்பாகக் கொண்டு இசைத்த வகையாகும் என்பதை நாம் அறிய வேண்டும், இக்காலம் நமது நாட்டில் இம்முறை தைவதாந்திய ராகப் பிரிவினுள் அடங்கியதாக (ராகமாக) உள்ளது. இதுவே நமது பழைய குறிஞ்சிப் பண் ஆகும். இது பிற்காலக் கருநாடக முறையிலும் குறிஞ்சிராகமென்றே கூறப்படுகிறது. இக்காலம் வரை பெயர் மாருத பழம் பண்களில் இதுவும் ஒன்று. குறிஞ்சி குறிஞ்சியாகவே இருத்தல் நலம் எனப் பெரியோர்கள் கருதுவது இயல்பு.

அன்றியும், திருவாரூரில் கிட்டத்தட்ட அறுபது ஆண்டுகட்கு முன்னிருந்த ஓதுவார்கள் குறிஞ்சிப் பண் எனப் பெயரிட்ட தேவாரத் திருப்பதிகங்களைக் குறிஞ்சி ராகத்திலேயேதான் பாடினர்கள் எனப் பெரியோர்கள் சொல்லக் கேட்கின்ருேம்; தேவாரக் குறிஞ்சிப்பண் இக்காலம் குறிஞ்சிராகந்தான் எனத் தெளிவாக அறிய வாய்ப்பு ஏற்படுகிறது. திருஞான சம்பந்தர் பாடிய பாடல்கள், பண் குறிஞ்சி எனத் தலைப்பெயரிடப்பட்டு, 26 பதிகங்கள் உள்ளன. இப்

இவற்றை இக்காலப் பெயர் முறையில் குறிக்க,
ச. தொடங்குமிடமாகவும்,
ரி. நான்கு அலகு பெற்றிருப்பதால் சதுசுருதி ருஷபமாகவும்,

க. எட்டலகு பெற்றிருப்பதால் அந்தர காந்தாரமாகவும்,
ம. ஒன்பதலகு ,, சுத்தமத்திமமாகவும்,
ப. பதின்மூன்றலகு ,, பஞ்சமமாகவும்,
த. பதினேழலகு ,, சதுசுருதி தைவதமாகவும் நிற்கும்;

நி. இவ்விசை இளிக்கு முன்னிற்பதால் மெலிவு நிலையில் ஒலிக்க வேண்டும்.

இதுவே குறிஞ்சிப் பண்ணின் சிறந்த உருவினைக் காட்டும். ஆகவே,

பழைய	இளி	இக்காலத்தில்	ஷட்ஜம்	எனவும்,
,,	விளரி	,,	ருஷபம்	,,
,,	தாரம்	,,	காந்தாரம்	,,
,,	குரல்	,,	மத்தியமம்	,,
,,	துத்தம்	,,	பஞ்சமம்	,,
,,	கைக்கிளை	,,	தைவதம்	,,
,,	உழை	,,	நிஷாதம்	,,

நன்கு அறிதல் வேண்டும். இவ்வகையில் குறிஞ்சி யாழில் இளி முதல் கைக்கிளை வரை நிற்கும் இசை நிலை இக்காலம் ஷட்ஜம், சதுசுருதி ருஷபம், அந்தர காந்தாரம், சுத்த மத்திமம், பஞ்சமம், சதுசுருதி தைவதம் என நிற்கக் காண்கிறோம், இக் கருவியில்

குறிஞ்சிப் பண்ணின் இலக்கணம்

பழந் தமிழர்கள் தாங்கள் வாழும் நிலங்களை ஐந்து வகையாக இயற்கை முறையில் பாகுபடுத்தி உணர்ந்தார்கள். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் எனக் கூறப்பட்டு, முல்லை முறைமையிற் றிரிந்து, எவ்வகையான தாவரங்களும் இல்லாது ஒரே வெட்ட வெளியாய் இருக்கும் இடம் பாலை எனவும் கூறப்பட்டது. ஆங்காங்கு வாழும் மக்கள் அவ்வந் நிலங்களுக்கு ஏற்றவாறு தொழில் புரிந்து வந்தனர். அவர்களுக்கு உரிய இசைக் கருவிகளும் தோற்கருவிகளும் உண்டு. குறிஞ்சி, மலையும் மலை சார்ந்த இடமும் எனக் கூறப்படும்.

அவற்றுள், (குறிஞ்சி நிலத்தில்) வாழ்ந்த மக்களிடத்தில் இருந்த நரம்புக் கருவி குறிஞ்சி யாழ் எனப்படும். இவ் யாழில் முதன் முதலாகக் கட்டப் பெற்ற நரம்புகளின் வழி எழுந்த பண் குறிஞ்சிப் பண் ஆகும்.

ஒரு நிலத்திற்குரிய யாழ் அந்நிலத்திற்குக் கருப்பொருள் ஆகும். குறிஞ்சிப் பண்ணினை யாமம் என்ற சிறு பொழுதில் மிகப் பழங்காலத்தில் அம் மக்கள் இசைத்துக் கேட்டு மகிழ்ந்தனர். இவ்விசையைத் தலைவனோ தலைவியோ பகற் பொழுதெல்லாம்

தினைப் புனங் காத்து இரவில் இசைத்து மகிழ்ந்த தால் அவர்களுக்குள் உணர்ச்சி மிகுந்து புணர்தல் ஏற்பட ஏதுவாயிருக்கலாம். அது குறித்தோ வேறு என்னவோ குறிஞ்சியின் உரிப்பொருள் புணர்தல் என்றுர் பேரியோர்.

ஒரு யாழிற்கு நரம்புகள் கட்டும் முறை பொது வாக உழைமுதற் கைக்கிளை இறுவாயாகக் கட்டப் பெறும் எனத் தமிழ் நூல் கூறுகிறது. அதாவது, உழை, இளி, விளரி, தாரம், குரல், துத்தம், கைக்கிளை என்பதாகும். இவை ஒரு நிரல் எனப்படும். நரம் பின் அளபறிந்து இரு நிரலாகவும் கருவியின் அமைப் பிற்கேற்ப மூன்று நிரலாகவும் கட்டப்படுவதுண்டு. இதன்விளைவாக ஒரு பண் வேறொரு பண்ணாக மாறு பாடு எய்துவதற்கும் அகநிலை, புறநிலை, அருகியல், பெருகியல் என நான்குவகைப் பாகுபாடுகள் காண் பதற்கும் வழிதோன்றும், ஏழ் பெரும்பாலை பன்னிரு பாலை என்ற பண்ணமைப்பு முறைகளை யெல்லாம் குறிஞ்சி யாழில் பொருந்தச் செய்யுமிடத்துப் பல் வேறு வகையான பண்முறைகள் தோன்றும்; அவை யாவும் வேறு வேறு நீர்மையுடைய யாழ்க் கருவி களில் முறையே ஏழ் நரம்புகள், ஒன்பது நரம்புகள், பதினன்கு நரம்புகள், பதி னேழு பத்தொன்பது இருபத்தொன்று நரம்புகள் எனக் (கருவிகளுக்கேற்பக்) கட்டப்படுவதும் பழைய வழக்காகும். இவையெல்லாம் தனித்தனிக் கருவியாகக் கொண்டு விளக்கப் பெறவேண்டும் நிற்க.

முதன் முதலில் உழைமுதல் கைக்கிளை யிறு வாயாகக் கட்டும் பொது இலக்கண வழியை இங்கு உளத்தில் உறுதியாகக் கொள்வது நலம். குறிஞ்சி யாழ்ல் கட்டப்பட்ட ஏழு நரம்புகளை எழுதி அறி வோமாக.

பழைய பெயர்	குறியீட்டெழுத்து	தற்காலப்பெயர்
உழை	நி.	நிஷாதம்
இளி	ச.	ஷட்ஜம்
விளரி	ரி.	ருஷபம்
தாரம்	க.	காந்தாரம்
குரல்	ம.	மத்யமம்
துத்தம்	ப.	பஞ்சமம்
கைக்கிளை	த.	தைவதம்

இவைபொதுப்படக் கூறப்பட்டன. ஏழிசைகளும்எத் துணை அலகில் நிற்கின்றன என அறிந்தால்தான் பண்ணின் ஒலியமைப்பு நன்கு விளங்கும். ஏழிசை யமைப்பு முறைகளில் மூவகை முறை என்று ஒரு பகுதியும் உண்டு. அவை தார முறை, குரல் முறை, இளி முறை எனப்படும். திருஞானசம்பந்தர் காலம் இளி முறை நிரம்ப வழக்கில் இருந்த காலமாகும். அதனை உளத்தில் வைத்து நோக்க, இளி முறையில் குறிஞ்சி யாழ் கீழ்க்கண்டவாறு அமையும்:

இசைநிலை	இளி	விளரி	தாரம்	குரல்	துத்தம்	கைக்கிளை
அலகுநிலை	0	4	8	9	13	17
குறியீட்டெழுத்து	ச	ரி	க	ம	ப	த

வர்கள் திண்டாடுகிறார்கள். இந்த நிலையிலும் பெரியோர்களே! தமிழ் பயின்ற பெரியோர்களே! ஏன் பேசாமல் இருக்கிறீர்கள்? இந்திய அரசியலார்க்கும் இங்கே உள்ள அவர்களின் வழியாளர்க்கும் ஏன் உண்மைகளை எடுத்துச் சொல்லாமல் இருக்கிறீர்கள்? இது தான் உங்கள் தமிழ்ப் பண்பா? சான்றாண்மையா?

இடிப்பாரை இல்லாத
ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்

அன்றோ! இன்றில்லை எனினும் பண்டொரு காலத்தில் இமய முதல் குமரி வரை ஒரு மொழி வைத்துலகாண்ட இனம் தமிழினமாயிற்றே! இன்னும் தமிழ்ப் பண்பாட்டின் சாறு சிறிதாவது இந்திய நாடெங்கும் ஊறி, 'பல் வண்ணம் பாய்ந்தோடும் சாறு' என இருந்து கொண்டிருக்கிறதே! என்றென்றும் ஒன்று சேர முடியாதபடி இந்தியா பிரிந்து போவதற்கான ஏகாதிபத்தியப் போக்கில் போகலாமா? இப்போதும் பேசாதிருந்தால் எப்படி?

முடியாட்சிக் காலத்திலேயே, மன்னனுக்கும் மக்களுக்கும் இடையில் இருந்து, எத்தகைய சங்கடமான நேரங்களிலும் இடித்துரை கூறி உண்மையை— நீதியை— நிலை நாட்டிய சங்கத் தமிழ்ச் சான்றோர்கள் எங்கே, குடியாட்சிக் காலத்தில் கோலேந்திகளின் கோலத்துக்கு நாம் ஏன் ஆளாக வேண்டும்? என்று கூனிக் குறுகி வெள்ளத்தனைய உள்ளத் துணர்ச்சிகளை வாளா அடக்கிக் கொண்டு மீளா ஆளாய்க் கிடக்கும் நீங்கள் எங்கே! ஆன்றோர் மரபில் வந்தோமே, ஆழ்ந்தறிய வேண்டிய அரிய உண்மைகளை அறியாத போக்கினர்க்கு எடுத்துச் சொல்ல வேண்டுவது நம் கடமையாயிற்றே என்று எண்ணிப் பார்த்தீர்களா?

காலம் போகிற போக்கில் நாமெல்லாம் இவற்றில் தலையிடுவது கண்ணியமல்ல என்று மாறிவிட்டீர்களா? எது கண்ணியம் என்று எண்ணிப்பார்த்தீர்களா? பேசத் தகுதியற்றவர்கள், பேசக் கூடாதவர்கள் எல்லாம் பேசுகிறார்களே! நீங்கள் மட்டும் ஏன் பேசாமல் இருக்கிறீர்கள்! தமிழ்மகனாக இருந்து கொண்டே, தமிழகம் என்று ஏன் பெயரிட வேண்டும் என்று தமது அடாத பெரும் பான்மைக் கிடையில் தட்டிக் கேட்கிறார்களே! கேட்ட பின்னரும் ஊமையராய்ச், செவிடர்களாய்க், குருடர்களாய் நாமமது தமிழரெனக் கொண்டு மட்டுமல்ல, தமிழ் பயின்றவர்கள் என்னும் தகவும் கொண்டு வாழ்கிறீர்களே! முறையா? பேசுங்கள்! இனியேனும் பேசுங்கள்! பேசவேண்டியதைப் பேசுங்கள்!

உண்மை உணர்ச்சியற்ற போலி உரிமையாட்சி மற்றவர்களுடன் ஒற்றுமையாக இருக்கும் உணர்வை நிலையாக உண்டாக்குமென்று எப்படித்தான் நம்புகிறார்களோ தெரியவில்லையே!

உணர்ச்சி யூட்டுவதில் பெயரைவிட முதன்மையானதும் இருக்கிறதா? இருந்தால், "செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே" என்று பாடினாரே பாரதி அந்தப் பாடலைக் கிழித்தெறியுங்களேன்!

'தமிழ்நாடு காங்கிரசு' என்று பெயரிட்டாரே அந்த உத்தமத் தலைவர், அதை மாற்றி அமையுங்களேன்!

எல்லாவற்றுக்கும் முன்னாக "முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்" என்று முழங்கினாரே அந்த மூதறிஞர்— அருளாளர் அப்பர் அவர் பாடலை முறையற்றதென்று எரிப்படுத்துங்களேன்!

தமிழ் நாட்டில் தமிழ் நிலம், தமிழ்மொழி, தமிழர் நலம் இவற்றைக் காக்க — 'தமிழகம்' என்ற பெயரை மீண்டும் இட்டு வழங்க, (முன்னெப்போதும் 'தமிழகம்' என வழங்கவில்லையாம், மு... கட்டிச் சொல்லி விட்... களே முன்வ... கறியாமல்,) ஏ...

ஓர் அமைப்பு இன்னும் அமையவில்லை. இதுதான் இன்றைய தமிழ் நாட்டின் பெருமை! "நெஞ்சு பொறுக்குதில்லையே, இந்த நிலை கெட்ட நாட்டினை நினைத்துவிட்டால்"!

அரசியல் கட்சிகளை — தம்மைவிட அறிவாளிகள் இல்லை என்பாரை — நம்பித் தமிழ் நன்மக்கள் அல்லற் படுகிறார்கள்; அலைக்கழிக் கப்படுகிறார்கள்! ஐயகோ! கொடுமை! கொடுமை!! இரங்கத்தக்க இழிநிலை!

இப்போது நீங்கள் கல் நெஞ்சர்களாகப் பேசாதிருக்கிறீர்களே! அதுதான் எல்லாவற்றினும் மிக்க கொடுமை!

தமிழ் நலம் உணர்ந்த தக்கோர்களே! தயவு செய்து முன்வாருங்கள்! தமிழைக் கற்றதன் நன்றியாக முன்வாருங்கள்! அரசியல் சார்பற்ற நடுநிலையாளர்களாக இருந்து சங்கச் சான்றோர்களைப்போல இந் நாட்டு அரசியல் கட்சிகளுக்கும் அவற்றின் தலைவர்களுக்கும் — தமிழ் நாட்டுமக்களுக்கும் உண்மைகளை எடுத்துச் சொல்லுங்கள்? இடித்துச் சொல்லுங்கள்! புகழ் கெடும் பழி வரும் என்று பார்க்காதீர்கள்! எது புகழ்? எது பழி? கடமயை எண்ணிப் பாருங் ள்? இனியும் பேசாமல் ருக்காதீர்கள்! பேசுங் ள்! இல்லையேல் தீராத வந்து சேரும். தென்னாடும் வடநாடும் என்றென்றும் ஒன்று சேர முடியாத நிலைக்குப் போய்த் தீமைப் படுகுழியில் விழும். தமிழ் நாடு மட்டுமல்ல — இந்திய அரசினர்க்கே, எல்லாத் துறையிலுமே உங்கள் தமிழ்ப் பண்பு மிக்க அறிவுரை ஆய்வுரை வேண்டும்.

நாட்டு மக்கள் ஆதரவு தருவார்களா தரமாட்டார்களா? என்று தயங்காதீர்கள்! உண்மைக்கு உரமுண்டு உயிருண்டு என்பதை உணராதவர்களோ நீங்கள்! எழுங்கள்! கடமையைச் செய்யுங்கள்!

உலகமே போற்றும் ஒப்பற்ற தமிழ் மறையை வாழ்க்கை மறையை உடையேம் யாம் என்னும் உரத்தோடு உங்கள் குரலை உயர்த்திப் பேசுங்கள்! இந்திய நாடென்ன — உலகமே ஒற்றுமைப்பட ஓராட்சி காணத் தமிழகம் தமிழாட்சி காணவேண்டும். தனியே பிரிந்தல்ல— தக்கபடி இந்தியாவோடு இணைந்தே— தமிழ்நெறியிலே இயங்கவேண்டும், உலகின் எல்லா மொழிப் பகுதிகளும் கூட அப்படித்தான்; உரிமையும் வளர்ச்சியும் ஒற்றுமையும் உரமும் அப்போதுதான் உண்டாகும், ஆகவே 'தமிழகம்' என்று அழையுங்கள்; அங்கே இன்பத் தமிழில் ஆட்சி காணுங்கள். வாக்கெடுத்து மக்கள் விருப்பப்படி எல்லைகளை வரையறுங்கள்! வடக்கும் தெற்கும் சமநிலை காண உழையுங்கள்! என்றெல்லாம் எடுத்தியம்புங்கள்; பெரியோரைத்துணை கொள்ளாவிட்டாலும், பெரியோர் தாமே முன்வந்து உதவலாமே! அதுதானே பெரியோர்களுக்கு அடையாளம்! என்னவந்தது நமக்கு, எப்படிப் போகிறது பார்ப்போம்! என்றெல்லாம் இருந்தது போதும் எழுங்கள்! பேசுங்கள்! பெரியோர்களே பேசுங்கள்.

ஆடலரசு

—

Phone. 55034 Tel. Enkayam

கைத்தறி ஆடைகளில்

சிறந்தது எங்கள் எலிபெண்ட் கிசான் டிரேட் மார்க்



பட்டாடைகளுக்கும்

நூலாடைகளுக்கும்

சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்,
53, கிடங்குத் தெரு, சென்னை, 1.

த்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம் (அஞ்)